செ.வெ.எண்: 681 /2014

நாள்: .11.2014

# பத்திரிக்கைச் செய்தி

05.12.2014 அன்று நடைபெறவிருக்கும் திருக்கார்த்திகை தீபத்திருநாளை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு தமிழகம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து வருகின்ற பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் நன்மைக்காக இந்நகரை சுற்றி அமைக்கப்பெறும் தற்காலிக பேருந்து நிலையங்களிலிருந்து முக்கியமான இடங்களுக்கு செல்ல ஆட்டோ ரிக்ஷா கட்டணம் நிர்ணயம் செய்து கட்டண பட்டியலை 9 தற்காலிக பேருந்து நிலையங்களிலும் மற்றும் நகரின் முக்கிய இடங்களிலும் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அ.ஞானசேகரன்,இ.ஆ.ப., அவர்கள் உத்திரவிட்டுள்ளார்.

**நிர்ணயம் செய்யப்பட்ட ஆட்டோ ரிக்ஷா கட்டணங்களின் விவரம் கீழ்வருமாறு:**

| திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழா – 2014 முன்னிட்டு ஆட்டோ ரிக்ஷா கட்டண விபரம் | | | |
|---|---|---|---|
| வ. எண் | ஆட்டோ ரிக்ஷா செல்லும் வழித்தடம் | தூரம் கி.மீ | திருவண்ணாமலை நகரத்திற்கான 2014-ம் வருட ஆட்டோ ரிக்ஷா கட்டணம் (ரூ) |
| (1) | (2) | (3) | (4) |
| 1. | வேட்டவலம் தற்காலிக பேருந்து நிலையம் முதல் திருக்கோவிலூர் தற்காலிக பேருந்து வரை | 1.6 | ரூ.25/- |
| 2. | திருக்கோவிலூர் தற்காலிக பேருந்து நிலையம் முதல் அங்காளம்மன் கோயில் வரை | 1.5 | ரூ.25/- |
| 3. | மணலூர் பேட்டை சாலை முதல் அங்காளம்மன் கோயில் வரை | 1.6 | ரூ.25/- |
| 4. | அத்தியந்தல் தற்காலிக பேருந்து முதல் அரசு கலை கல்லூரி மைதானம் வரை (பெரும்பாக்கம் ரோடு) | 5 | ரூ.73/- |
| 5. | அரசு கலை கல்லூரி முதல் அங்காளம்மன் கோயில் வரை | 2.4 | ரூ.37/- |
| 6. | அத்தியந்தல் தற்காலிக பேருந்து முதல் அங்காளம்மன் கோயில் வரை | 7.5 | ரூ.97/- |
| 7. | திண்டிவனம் ரோடு தற்காலிக பேருந்து நிலையம் முதல் திருவள்ளுவர் சிலை வரை | 1 | ரூ.25/- |
| 8. | திண்டிவனம் ரோடு தற்காலிக பேருந்து நிலையம் முதல் காந்தி நகர் பைபாஸ் ரோடு 6-வது குறுக்கு தெரு வரை | 1 | ரூ.25/- |
| 9. | திருக்கோவிலூர் ரோடு முதல் அத்தியந்தல் வரை | 8.2 | ரூ.109 |
| 10 | நல்லவன்பாளையம் முதல் அங்காளபரமேஸ்வரி கோயில் வரை | 2.5 | ரூ.37 |
| 11. | பச்சையம்மன் கோவில் முதல் கிருஷ்ணா லாட்ஜ் வரை | 2.1 | ரூ.37/- |

மேற்காணும் கட்டண பட்டியல்கள் 9 தற்காலிக பேருந்து நிலையங்களிலும் மற்றும் நகரின் முக்கிய இடங்களிலும் அமைபதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, தமிழகம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து வருகின்ற பொதுமக்கள் மேற்படி ஆட்டோ ரிக்ஷா கட்டண வீதங்களின்படி ஆட்டோ ரிக்ஷாக்களில் பயணிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவண்ணாமலை.

**செய்தி வெளியீடு:**
செய்தி மக்கள் தொடர்புஅலுவலர்,
திருவண்ணாமலை.